**தலைப்பு 244 – வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 244 – வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 22 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

---

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 55.03 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 50.15 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 4.88 மில்லியன் அதாவது 8.87 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 49.93 | 47.07 | 2.86 | 5.73 |
| மூலதனம் | 5.10 | 3.08 | 2.02 | 39.61 |
| மொத்தம் | **55.03** | **50.15** | **4.88** | **8.87** |

2.2 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய **24401** ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2.00 | 1.99 | 1.30 | 1.88 | 12.00 | 8.07 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6000/0000/00/0018/0044/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 25,200 இருந்தது.

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0395/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 492,510 ஆக இருந்தது.

**2.5 கணக்காய்வு அவதானிப்பு**

வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு விலகல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 07/2015 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் எரிபொருளுக்கான நிதியேற்பாடு 15 சதவீதம் மற்றும் போக்குவரத்துக்கான நிதியேற்பாட்டில் 10 சதவீத கட்டாய சேமிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலவின விடயமொன்றின் கீழ் ரூபா 200,000 ஆன முழு நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 06 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாமையால் அச்செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் 25 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

**பாதீட்டு மதிப்பீடு, பெறுகைத்திட்டம் மற்றும் உள்ளவாறான செலவினம்**

2016 ஆம் ஆண்டில் பாதீட்டு மதிப்பீட்டில் பெறுகை நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் மற்றும் பெறுகை திட்டத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு இடையே ரூபா 2,600,000 ஆன வேறுபாடு காணப்பட்டன.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

**தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டு கணக்கு மற்றும் பொறுப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட பொறுப்புகளுக்கிடையே ரூபா 97,904 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 3.4 செயலாற்றுகை

2016 வருடாந்த மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் முன்னேற்றம் மீதான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) சுங்க வழக்குகள் தொடர்பான மேன்முறையீடு தொடர்பாக அறிக்கை கோரி இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பியது தவிர வேறு ஏதேனும் நடைமுறைகளை கணக்காய்வு திகதியான 2017 செப்தெம்பர் 12 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மோட்டார் வாகன இறக்குமதி கொள்கை மற்றும் மோட்டார் வாகன கைத்தொழிலின் ஒன்று சேர்த்தல் கொள்கைக்குரிய கொள்கை வரைவு 2017 செப்தெம்பர் 12 ஆந் திகதி வரையிலும் தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், புதிய கொள்கையைத் தயாரிப்பதற்கு பதிலாக காணப்படும் கொள்கையை திருத்தம் செய்துள்ளதாக திணைக்களத்தினால் 2017 திசெம்பர் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(இ) செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் 50 பிரதான ஏற்றுமதி உற்பத்திகளை பட்டியலிடும் உத்தேச வியாபார உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சுங்க கட்டளைச் சட்டத்தின் 19 (அ) (1) மற்றும் (2) பிரகாரம் சுங்க தீர்வை வரி விடுவிப்பு தொடர்பான விபரங்கள் 2010 ஆம் ஆண்டு முதல் 2017 செப்தெம்பர் 12 வரை வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் சுங்க கட்டளைச் சட்டத்தின் 19 (அ) (2) பிரிவின் கீழ் தீர்வை வரியை பதிவழிப்பதற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 2129 ஆக இருந்ததுடன் அந்த அனுமதிப்பத்திரங்களின் கீழ் வழங்கப்படும் தீர்வை வரிச் சலுகையின் பெறுமதி தொடர்பான விபரங்கள் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சுங்க கட்டளைச் சட்டத்தின் 19 (அ) பிரிவின் பிரகாரம் சுங்க வரி விடுவிக்கும் செயற்பாட்டின் போது திணைக்களத்தினால் இவ் விடுதலை தொடர்பாக மேற்பார்வையொன்று செய்யப்படக்கூடிய வகையில் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சுங்க கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் விஷேட அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் மீள் ஏற்றுமதிக்காக அங்கீகாரம் வழங்குவது திணைக்களத்தின் செயற்பாடொன்றாகும். எவ்வாறாயினும், அவ்வாறு இடம்பெறுகின்றதா எனப் பரீட்சிக்கும் முறையொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் மீள் ஏற்றுமதி செய்யப்படாத பொருட்கள் காணப்பட்டால் எடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அரசாங்க நிறுவனங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் பண்டங்களுக்காக சுங்கவரி செலுத்துவதற்காக அச்சந்தர்ப்பத்தில் நிறுவனத்திற்கு வழங்கியிருந்த நிதியேற்பாடுகள் போதியளவில் காணப்படாவிடின் குறிப்பிட்ட பண்டங்களை தாமதமின்றி விடுவிப்பதற்காக அந்த பண்டங்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய சுங்கவரியை ஆண்டின் இறுதியில் மீதியாகவுள்ள நிதியேற்பாடுகளில் இருந்து செலுத்துவதற்கான இணக்கமொன்றின் பேரில் பொருட்களை விடுவிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2007 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய இலங்கை சுங்கத்தின் தகவல்களின் பிரகாரம் மேற்கூறப்பட்ட நிலுவை வரி தொகையான ரூபா 21,648.55 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த நிலுவை தொகையில் அரச நிதிக் கொள்கை திணைக்களத்தின் கட்டளையின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு பொருட்களை விடுவிக்கப்படுவதற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்திற்காக 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை ரூபா 185.44 மில்லியன் நிலுவை தொகையும் காணப்பட்டது.

(ii) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வரி மீதி ரூபா 19,497.55 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டில் நிவாரணம் வழங்கப்பட்ட ரூபா 5,707.65 மில்லியனாக இருந்தது. ஆண்டில் அறவீடுகள் ரூபா 3,556.65 மில்லியனாக இருந்தமையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 21,648.55 மில்லியனாக இருந்தது. 2015 திசெம்பர் 31 இல் இவ்வாறு

நிலுவையாக இருந்த 15 நிறுவனங்களில் அத்திகதியில் காணப்பட்ட ரூபா 9,996.77 மீதியே 2016 ஆம் ஆண்டின் இறுதியிலும் மாற்றமுராது காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டதுடன் நிலுவை மீதியை அறவிடும் சதவீதம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதிக்கு ஒப்பாக 18 சதவீத அதிகரிப்பொன்றாகும். அந்நிலுவை பணத்தை அறவிடுவது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) எவ்வாறாயினும் எஞ்சிய கொடுப்பனவு முறைமையின் கீழ் வரிக் கொடுப்பனவிற்காக அங்கீகாரம் வழங்குவது தொடர்பாக பதிவேடொன்று திணைக்களத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. அந்த அங்கீகாரங்களுக்குரிய பொருள் விடுவிக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக திணைக்களத்திற்கு அறிவூட்டப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

### 3.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 11 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 28 | 23 | 05 |
| (iv) | ஆரம்ப நிலை | 13 | 13 | - |
| | **மொத்தம்** | **58** | **50** | **08** |